அதிலேயே நாட்டம் கொண்ட பகுதி இருந்தால்தான் இந்த வேலைகள் செம்மையான முறையில் நடைபெற முடியும். பொதுப்பணித் துறையில் இந்தப் பொறுப்பை விட்டால், அது அந்த அளவுக்கு நடைபெறாது என்று தான் இப்போது தனியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

கல்வி கமிஷன் பரிந்துரைகள்.

* 326 வின.—**திரு. என். மருதாசலம் :** மதிப்பிற்குரிய கல்வி–தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கல்வி கமிஷன் சிபார்சின் அடிப்படையில் மாநில ரீதியில் ஆரம்பக் கல்விக்குச் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களைப் பற்றியும் விவாதித்து முடிவெடுப்பதற்கு ஆசிரிய சங்கங்களின் பிரதிநிதிகளும், அரசாங்க அதிகாரிகளும், கல்வி நிபுணர்களும் சமபங்காகக் கொண்ட கல்விக் கூட்டுக் குழுக்களை அமைப்பது குறித்து அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தமிழ்நாட்டைப் பொறுத்த வரை கல்வி கமிஷன் பரிந்துரைத்திருப்பது போன்ற கல்விக் கூட்டுக் குழுக்களை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என இந்த அரசு கருதுகிறது. ஆகவே, அரசு அந்த சிபாரிசை ஏற்றுக் கொள்ளும் நிலையி லில்லை.

திரு. என். மருதாசலம் : ஸார், நம் மாநிலத்திலே கல்விக் கமிஷன் சிபாரிசுப்படி, கல்வி சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களையும் ஆராய கல்விக் கமிஷன் ஒன்றை நம் மாநிலத்தில் ஏற்படுத்தினால் கல்வியின் தரம் உயரும், அதனால் கல்வி ஆசிரியர்களுக்கும் ஒரு உற்சாகம் ஏற்படும் என்று அரசு கருதுகிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கோத்தாரிக் கமிஷன் இப்படிப்பட்ட ஒரு சிபாரிசு செய்திருக்கிறது, செய்யலாம் என்று. ஆசிரியர்களின் பிரதிநிதிகள், அரசாங்க அதிகாரிகளின் பிரதிநிதிகள் கொண்ட கமிட்டி போட்டு, அதற்கு கல்வித்துறைச் செயலாளர் செயலாளராக இருந்து நடத்துவது என்று சிபாரிசு செய்திருக்கிறது. அப்படி அமைப்பதன் மூலமாக ஏற்படும் நன்மையை விட, இப்போது இருக்கிற முறையில் அதிக நன்மை ஏற்படக் கூடும். கல்வித் துறையில் அதிகார பூர்வமான சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தலைமை ஆசிரியர்கள் சங்கம், சவுத் இண்டியன் டீச்சர்ஸ் கில்ட் போன்ற பல்வேறு சங்கங்கள் தனித்தனியாக ஆராய்ந்து, சிபாரிசுகளை வழங்கி, அவைகளின் மீது தக்க முடிவு எடுக்க இப்போது இருக்கிற அமைப்பே நடைமுறைக்கு உகந்ததாக இருக்கிறது. இதற்காக ஒரு குழு அமைத்தால், பிரதிநிதிகள் ஒரு சிலர் தாம் இடம் பெறக் கூடும். அதிகாரிகளில் ஒருசிலர்தான் இடம் பெறக்கூடும். கல்வித் துறை செயலாளர் அந்தக் குழுவுக்குச் செயலாளராக இருப்பதால், அவரும் சேர்ந்து ஒரு முடிவு எடுக்கும் நிலைமை இருக்கிறது. அந்த முடிவு அரசுக்கு வரும்போது, அமைச்சரவைக்கு வரும்போது அந்தச் செயலாளர் தான் ஆராயவேண்டும். அவரும் இருந்து அங்கே செய்த முடிவை அவரே இங்கு ஆராய வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட இடர்பாடுகள் இருப்பதால், இப்போது இருப்பதே சரியாக இருக்கும். அவர்களைக் கேட்டுச் செய்ய ஆலோசனைக்குழு இருப்பதால் கல்வியின் நிலை, கல்வி நிலயங்கள் பற்றி இப்போது இருக்கிற முறையில், அடிப்படையில் பணியாற்றுவது வசதியாக இருக்கும் என்று இந்த அரசு கருதுகிறது.

Neighbourhood schools

* 327 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government are contemplating to start "Neighbourhood schools" under which rich and poor students would have to study in the same schools since all schools would have the same basic facilities and standards ; and